பிறப்பிப்பவர்: திருமதி க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

***

**செயல்முறை ஆணை எண் 30901/டி3/2020, நாள்: 29.07.2022**

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வித் துறை – அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – (லேட்) திரு.கி.பத்மநாபன், கம்பியாளரின் வாரிசுதாரர்(மகன்) திரு.ப.கோகுல்கிருஷ்ணன், என்பவருக்கு, கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – ஆணையர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3டி) எண்.12 உயர்கல்வித் (டி2) துறை நாள் 19.07.2022

***

பார்வையில் காணும் அரசாணையில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ப.கோகுல்கிருஷ்ணன், என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை

ஒம்/- க.லட்சுமி பிரியா
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
திரு.ப.கோகுல்கிருஷ்ணன்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பொறியியற் கல்லூரி,
கோவை (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்,
அரசினர் பொறியியற் கல்லூரி,
கோவை
டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

சுருக்கம்

உயர்கல்வி - தொழில்நுட்பக் கல்வி - கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கம்மியராக பணிபுரிந்து மறைந்த திரு.கி.பத்மநாபன், என்பவரின் வாரிசுதாரர், திரு.ப.கோகுல்கிருஷ்ணன் என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி2)த் துறை

அரசாணை (3 ப) எண்: 12

நாள்: 19.07.2022
சுபகிருது வருடம், ஆடி : 03
திருவள்ளுவர் ஆண்டு, 2053
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020
2. அரசாணை (நிலை) எண் 305, உயர்கல்வி (சி2)த் துறை, நாள் 13.12.2018
3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.30901/டி3/2020, நாள் 20.07.2021.

*****

ஆணை:

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி துறையைச் சார்ந்த கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கம்மியராகப் பணியாற்றிய திரு.கி.பத்மநாபன், என்பவர் பணியிலிருக்கும் போது 17.09.2008 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மனைவி திருமதி.வி.பாக்கியலட்சுமி, என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 04.08.2009 அன்று விண்ணப்பம் அளித்திருந்தார். என்றும் அவ்விண்ணப்பம் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட நிலையில், தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும் தனது இளைய மகன் திரு.ப.கோகுல்கிருஷ்ணன், என்பவருக்கு கருணை

அடிப்படையில் வேலை அளிக்கும்படி 18.05.2015 நாளிட்ட தனது விண்ணப்பத்தில் கோரியிருந்தார். என்றும் அரசு ஊழியர் இறந்த நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குள் (16.9.2011) அவரது மகன் திரு.ப.கோகுல்கிருஷ்ணன். 18 வயது மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றை பூர்த்தி செய்திருக்கவில்லை. என்றும் மறைந்த அரசு ஊழியரின் மனைவிக்கு பதிலாக, அவரது மகன் திரு.ப.கோகுல்கிருஷ்ணன் என்பவருக்கு வேலை கோரி 18.5.2015-ல் அளித்துள்ள விண்ணப்பத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது குறித்து தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசின் தெளிவுரையினைக் கோரியிருந்தார். மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திரு.ப.கோகுல்கிருஷ்ணன் என்பார் பொருட்டு அரசு ஊழியர் பணியிடை மரணமடைந்த மூன்று ஆண்டுகளுக்குள் பணி நியமனம் வேண்டி விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை வழங்கப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள் 26.06.1995, அரசு கடித (நிலை) எண் 202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 08.10.2007 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6) (b)-க்கு தளர்வு அளித்து, கருணை அடிப்படையில் நியமனம் செய்ய ஆணை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.34094/டி3/2009, நாள்.22.08.2019-இல் திரு.ப.கோகுல்கிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும் பணி நியமன ஆணையில், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் 09.09.2019-க்குள் பணியில் சேரும்படி தெரிவிக்கப்பட்டது என்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தொழில்நுட்பக் கல்வி ஆணையர், மேற்கண்ட தனியர் B.E (Mechanical) பட்டப்படிப்பில் இறுதி ஆண்டு படித்து வருவதால் பணியில் சேர எட்டு மாத கால அவகாசம் கோரியிருந்ததை ஏற்றும் அவரது கல்வி நலன் கருதியும் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டு, பின்னர் இணைய வழியில் தேர்வுகள் நிறைவு பெற்ற பின்னர், தேர்வின் அடுத்த நாள் அன்று, தவறாமல் கோவை,

அரசினர் பொறியியற் கல்லூரியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேரும்படி அறிவுறுத்தப்பட்டார். என்றும் அதன்படி, திரு.ப.கோகுல்கிருஷ்ணன் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் 2.9.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

3. எனவே, தொழில்நுட்பக் கல்வித் துறையில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.ப.கோகுல்கிருஷ்ணன், என்பவரின் பணிநியமனம் குறித்து அரசு நிலையில் பரிசீலித்து, தனியர் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் அவரது பணியினை வரன்முறைப்படுத்தி, தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கல்வித் துறையில் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வரும் திரு.ப.கோகுல்கிருஷ்ணன், என்பவரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, தனியரின் தாயாரால் மாற்று விண்ணப்பம் அளித்த நாளில் திரு.ப.கோகுல்கிருஷ்ணன், 18 வயதை பூர்த்தி செய்யாததால், குறும வயது குறித்து மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிக்கு தனியர் பொருட்டு விலக்கு அளித்து அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 12453/ட்டி1/2022-1, நாள் 06.07.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அ.சா.எண். 3864/ ஜி3/ 2022, நாள் 22.02.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25.
முதல்வர், அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.
திரு.ப.கோகுல்கிருஷ்ணன், அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை,
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (ட்டி1) துறை, சென்னை – 9.
மனிதவள மேலாண்மைத் (ஜி) துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித்துறை,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.